KOSHYS INSTITUTE OF MANAGEMENT STUDIES BANGALORE
LIBRARY

**AETM – 204**

**II Semester B.B.A./B.H.M./B.C.A./B.S.W./B.B.A.(T and T) Degree Examination, October/November 2022**
**(NEP)**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)**

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1) உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல்
   1) பாரி 2) சீதக்காதி 3) ஓரி 4) நள்ளி

2) 'நரிவிருத்தம்' என்னும் நூலின் ஆசிரியர்
   1) திருத்தக்க தேவர் 2) கம்பர்
   3) இளங்கோவடிகள் 4) சீத்தலைச்சாத்தனார்

3) வில்லிப்புத்தூரார் பிறந்த ஊர்
   1) திருவொற்றியூர் 2) திருப்பரங்குன்றம்
   3) திருவாதவூர் 4) திருமுனைப்பாடி

4) 'எதிர்பாராத உதவி' என்னும் சிறுகதையின் ஆசிரியர்
   1) வைரமுத்து 2) அய்க்கண்
   3) க. சங்கர் 4) பா. சந்திரசேகர்

5) பகுபத உறுப்புகள் இத்தனை
   1) நான்கு 2) ஆறு 3) எட்டு 4) பத்து

II. எவையேனும் ஐந்திற்கு இடம்சுட்டிப்பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1) காடு அளிக்க அதனிடை திரிந்து உறை கரந்து போயினர்கள் காண ஓர்
   வீடு அளிக்கினும் வெறுப்பரோ இதனை விடுக என்று எதிர் விளம்பினான்

2) புல்லு கன்று உளிப் பொழிந்து பால் படும்
   கல் என் சும்மை ஓர் கடலின் மிக்கதே

3) வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்
   பருவரல் உழக்கு முள்ளத் தொடும்பினை பகரு மன்றே

4) இன்றால் எனது பிறப்பு உணர்ந்தேன் என்று அன்பு உருகி எம்பியர் பால்
   சென்றால் என்னை நீ அறிய செகத்தார் என்றும் சிரியாரோ

P.T.O.

5) குருளையும் பிணையும் கூடி வருவது குறித்து நோக்கி முருகலர் புயத்தார் வள்ளன் முகமது மகிழ்ந்தன் பாக

6) அந்தப் பதினைந்து ரூபாய் கிடைக்காமல் மெய்யப்ப செட்டியாரின் மகன் அழகப்பன், தேர்வுக்கு இன்னும் பணம் கட்டவில்லை

7) மூணு வருசம் பல்ல கடிச்சிட்டு வேல பாத்தா ஏதோ கொஞ்சம் பணம் கிடைக்கும்

8) கம்பங் கூழின் மணமும் அதற்கு பக்கவாத்தியமாக நெத்திலிக் கருவாட்டின் வாசமும் பசியால் துடித்துக் கொண்டிருந்த அவர்களைச் சுண்டி இழுத்தாலும் ஏதோ ஒன்று அவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தது

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) பகுபதம், பகாப்பதம் – இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2) பெயர்ச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன் எழுதுக.
3) திரிசொல்லின் வகைகளைச் சான்றுடன் புலப்படுத்துக.
4) உவமைத் தொகை, உம்மைத்தொகை-இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடுக.
5) கண்ணன் எவ்வாறு அத்தினாபுரியை அடைந்தான் என்பதை விளக்குக.
6) வேடர்கள் ஆநிரையைக் கவர எவ்வாறு திட்டமிட்டனர் ?
7) ‘புத்தருக்கும் அடிசறுக்கும்’ இச்சிறுகதையின் கருவை விளக்குக.
8) ‘ஊர்மிளை’ என்னும் சிறுகதை சித்தரிக்கும் பெண்ணின் மன உணர்வுகளைக் காட்சிப்படுத்துக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) கர்ணன் குந்தியிடம் பெற்ற வரங்கள் யாவை ?
2) நந்தகோன் தன்மகனைச் சீவகனுக்கு மணமுடிக்க முயன்றதன் விளைவுகள் குறித்து எழுதுக.
3) மான், தனது குட்டியை நினைத்து எவ்வாறு வருந்தியது ?
4) ‘மேன் மக்கள்’ என்னும் சிறுகதையில் மெய்யப்ப செட்டியாரின் பாத்திரப் படைப்பு குறித்து எழுதுக.
5) ‘கானல் நீர் கனவுகள்’ – என்னும் சிறுகதையின் வழி புலனாகும் சமூக சிக்கல்கள் குறித்து எழுதுக.
6) அழுக்கு-என்னும் சிறுகதையின் தலைப்புப் பொருத்தம் குறித்து ஆராய்க.

---